செப்டம்பர் 2010 மலர் 3 இதழ் 5

ஸ்ரீ ராம் சந்த்ர மிஷன்®

India ECHOES
ONE WORLD ONE HUMANITY

For Private Circulation Only

# லக்னோவில் மாஸ்டரின் 84வது பிறந்தநாள்

## விழாக்கொண்டாட்டங்கள் 23-26ஜூலை, 2010

60ஏக்கர் நிலமும், அதன் அருகில் அப்யாசிகளுக்காக திட்டமிடப்பட்டுள்ள பெரிய காலனியும் கொண்ட லக்னோ ஆசிரமம், இந்தியாவின் மிகப் பெரிய ஆசிரமங்களில் ஒன்றாகும். வருடத்தின் இப்பகுதியில், இங்கு பெய்யும் கனமழையை நினைவில் கொண்டு, இம்முறை விழாநடைபெறும் வளாகத்தில் ஏராளமான முன்னேற்பாடுகள் செய்யப்பட்டு இருந்தன. மழைநீர் வடிகால் அமைப்புடன்கூடிய கான்கிரீட் சாலைகள், அப்யாசிகள் நடமாட மேலும் வசதியாக இருந்தன. தியானக்கூடம், உணவுக்கூடம், சிற்றுண்டிச்சாலைகள் மற்றும் வழக்கமான விற்பனைக் கூடங்கள் அனைத்தும், மழைநீர்புகாத, மிகப்பெரிய பாதுகாப்பான அமைப்புக்களால் எழுப்பப்பட்டிருந்தன.

அங்கு கூடியிருந்த சுமார் 15,000 அப்யாசிகள் வரவேற்க, ஜூலை 21ம் தேதி மதியம், மாஸ்டர் அங்கு வந்து சேர்ந்தார். அன்று மாலை, புதிதாக நிர்மாணிக்கப்பட்டுள்ள தியானக்கூடத்தைத் திறந்துவைத்து, அதனை பாபுஜி மகராஜுக்கு அர்ப்பணித்தார். 15,000ச.அடி உள்ள அந்தக்கூடத்தில், 3000 பேர் அமரலாம்.



லக்னௌவில் அப்யாசிகளுக்கு மாஸ்டர் உரையாற்றுதல்-உ0க0ஜூலை







இந்தியா முழுவதிலும், மற்றும் வெளிநாட்டில் இருந்தும் வந்திருந்த, 40,000க்கும் அதிகமானவர்கள் பங்கேற்று, ஜூலை 23ம் தேதி துவங்கிய இவ்விழாவின் கருப்பொருள் 'அன்பும் நன்றியுணர்வும்' ஆகும். விழாவின் மற்றும் ஒரு முக்கிய நிகழ்வு, மாஸ்டர் ஆசீர்வதித்து நடத்திவைத்த 24 திருமணங்கள் ஆகும். அவர், சிந்தனையைத் தூண்டும் மூன்று உரைகளை நிகழ்த்தி, மேலும் நம்மை ஆசீர்வதித்தார். 24ம் தேதி அன்று, "அனந்தத்தை நோக்கி சகஜ மார்க்கம்" என்பதைப் பற்றி அவர் பேசியபோது கூறியதாவது:-

- ★ சகஜ மார்க்கத்தில் 46வருடங்கள் இருந்த பிறகும், நான் இன்னும் முடிவில்லாத பயணத்தில்தான் இருக்கிறேன். சகஜ மார்க்கத்தில், நாம் அனந்தத்தை நோக்கிச் செல்கிறோம். அதில் நிபுணத்துவம் பெற்று, அதனை நம் பிடியில் வைத்துக் கொள்ள வேண்டும்.
- ★ மாஸ்டர் நமக்காக அனைத்தையும் செய்து விடுவார் என்று நாம் நினைக்கிறோம். ஆனால் நம் ஒத்துழைப்பு நூறு சதவீதம் இருக்க வேண்டும். அதன்பின், அவரது உதவி ஆயிரம் சதவீதம் இருக்கும்.
- ★ பயிற்சி மட்டுமே முடிவு ஆகாது, ஆனால் அதன்மூலம், நாம், நம் சார்ந்திருத்தலை மாஸ்டர் மீது மாற்றிக்கொள்கிறோம்.

ஜூலை 25, குருபூர்ணிமா அன்று காலை, மாஸ்டர் தன் உரையில் கூறியதாவது:-

- ★ இந்நாளில், குருவுடன் யார் இருக்கிறார்களோ, அவர்களுக்கு வேகமான முன்னேற்றம் ஏற்படுகிறது.
- ★ நம் செயலாற்றுவதற்கான அவசியத்தையும், நம் முன்னேற்றத்திற்கான பொறுப்பையும் நாம் உணர்ந்திருக்க வேண்டும்.

உரைநிகழ்த்திக் கொண்டிருந்தபோதும், அதன்பின்பும், மாஸ்டர் மூச்சுத்திணறலுடன் இருந்தார். மாலையிலும் அதே நிலைமையில் இருந்தபோது, மாஸ்டர் சில அப்யாசிகளிடம், "நான் நோயுற்று இருக்கிறேனா என்று எனக்குத் தெரியாது. ஆனால் நான் முற்றிலும் நலமாகவே இல்லை' என்று கூறினார்."

ஜூலை 26 காலை, மாஸ்டர் தன்முடிவுரையில் கூறியதாவது:-

- ★ பாபுஜி மகராஜ் கூறுவதுபோல், ஒன்றே ஒன்றுதான் முடிவில்லாதது-ஆன்மீக வாழ்க்கை-ஏனெனில் தெய்வீகத்தின் அம்சமான அல்லது அதன் ஒரு பொறியான ஆன்மாவும் அழிவில்லாதது மற்றும் முடிவில்லாதது.
- ★ பாபுஜி மகராஜ், தாயன்புதான் மனிதவாழ்க்கையிலேயே மிகவும் புனிதமானது என்று கூறினார். எனவே, உங்கள் குருவை உங்கள் அன்னையாக ஏற்றுக் கொள்ளுங்கள்.
- ★ பிரதிபலனை எதிர்பார்க்காமல் நாம் சேவை புரியும்போது, அதுதான் புனிதமான சேவை ஆகிறது.
- ★ அவரது இதயத்தை அடைய சுலபமானவழி, சேவை புரிவதே ஆகும். மாஸ்டருக்கு நமது சேவை தேவை இல்லை. ஆனால், அவ்விதம் சேவைசெய்தல், தாயுடன் ஒன்றி இருப்பதால், வருக்கு உதவி புரியும் ஒரு குழந்தையைப்போல, இயற்கையான ஒன்றாக இருந்தால், இறுதியில், அக்குழந்தை





ஸ்ரீ ராம் சந்த்ர மிஷன்®
எக்கோஸ் இந்தியா செய்திமடல்

அன்னையுடன் ஒன்றிவிடுகிறது.

அவருக்கு உதவி புரியும் ஒரு குழந்தையைப்போல, இயற்கையான ஒன்றாக இருந்தால், இறுதியில், அக்குழந்தை அன்னையுடன் ஒன்றிவிடுகிறது.

சகோதரிகள் அபர்ணா கோஷ், ரஞ்சனா மெஹ்தா, மீனா மிஸ்ரா மற்றும் சகோ. குருப்ரீத் அவர்களால், காலை மாலை நிகழ்ச்சிகளில், பல பஜன்கள் வழங்கப்பட்டன. அதைத்தவிர, சகோதரி K. சௌம்யா அவர்களால், ஒரு பரதநாட்டிய நிகழ்ச்சி, பரோடா மையத்தைச் சேர்ந்த அப்யாசிகளால், சந்த் கபீரின் வாழ்க்கைப் பற்றிய ஒருநாடகம், மற்றும் ருஷ்ய அப்யாசிகளால் ஒரு சங்கீத நிகழ்ச்சி ஆகியவையும் நடைபெற்றன.

மிஷனின் பல்வேறு அமைப்புக்களான, SMRTI, CREST, VBSE, SHPT, எக்கோஸ் செய்திமடல், இணையதளம் மற்றும் தகவல் தொழில்நுட்பம் ஆகிய குழுக்கள் சந்தித்து, வருங்காலச் செயல் திட்டங்களைப் பற்றித்திட்டமிட ஒரு வாய்ப்பாகவும் இந்தவிழா அமைந்தது. மிஷனின் செயல்திட்டகுழுவின் கூட்டத்திற்குப்பின், மாஸ்டர், அன்று வெளியிடப்பட்ட "விஸ்பர்ஸ் ஃப்ரம் த ப்ரைட்டர் வர்ல்ட் - மூன்றாவது வெளிப்பாடு புத்தகத்தைக் குறிப்பிட்டு, "இங்கு நடைபெறுவது அனைத்தும், அவர்களுக்குத் தெரியும். இது ஒரு மீன் தொட்டியைப் போன்றது. நாம் அனைவரும் உள்ளே இருக்கிறோம். ஆனால் நாம் வெளியிலிருந்து கவனிக்கப்படுகிறோம்." என்று கூறினார். தனது உடல்நலம் மற்றும் வேலைப்பளுவைக் குறிப்பிட்டுக் கூறும்போது, தேவைப்படும் போது, பாபுஜிக்கு பிரிட்டிஷ் தூதரகத்தின் பல மாடிகளை ஏறமுடிந்ததையும், அப்போது அவர், "நான் பலமில்லாமல் இருக்கலாம். படிக்காதவனாக இருக்கலாம். ஆனால், தேவைப்படும் சூழ்நிலையில் நான் என்ன வேண்டுமானாலும் செய்யலாம்" என்று கூறியதாகவும் குறிப்பிட்டார்.

"என் மாஸ்டர் செய்ததில், குறைந்தபட்சம் நூற்றில் ஒருபங்கு, அல்லது ஆயிரத்தில் ஒரு பங்காவது செய்ய நான் முயற்சி எடுக்க வேண்டாமா?" என்றும் மாஸ்டர் கூறினார்.

உலகம் முழுவதிலும் இருந்து வந்திருந்த அப்யாசிகள், மற்றும் மிஷன் நிர்வாகிகளை சந்தித்து, மிஷன் செயல்பாடுகளைப்பற்றி கலந்துரையாடி, அவர்களுக்கு சிறப்பாக வழிகாட்டி, அப்யாசிகள் மற்றும் அவர்கள் குழந்தைகளை சந்தித்து, அழகாக, கருணையுடன், அவர்கள் சொந்தக்குறைகளையும் கேள்விகளையும் கேட்கவும் மாஸ்டர் நேரம் எடுத்துக்கொண்டார்.

விழாவில், வழக்கம்போல், குழந்தைகள் மையமானது, பல்வேறு செயல்பாடுகளுடன், மிகவும் குதூகலமாகக் காணப்பட்டது. 4200க்கும் மேற்பட்ட குழந்தைகள், பலவிதமான கேளிக்கைகள், மாஜிக் காட்சிகள், பொம்மலாட்டம், விளையாட்டுக்கள், கலைமற்றும் கைவேலைகள் ஆகியவை மூலம் மகிழ்விக்கப்பட்டனர்.

தன் உடல்நலம், அல்லது சௌகரியம் ஆகிய எதையும்பற்றிச் சிந்திக்காமல், அயர்வே இன்றி வேலை செய்து, குழந்தைகளை எல்லாம் மொத்தமாகவும், தனித்தனியாகவும் கவனித்துவரும், இடைவிடாமல் உழைக்கும் அன்னையாக மாஸ்டரைக் காண்பதே, சிறப்பாக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த இந்த விழாவின், நிரந்தர நினைவாகும்.


உணவுக்கூடம்


தியானக்கூடம்


குழந்தைகள் மையம்



## மாஸ்டரின் பயணங்கள்

### சென்னை

மாஸ்டர், ஆசிரமத்திற்கும், இல்லத்திற்கும் போய் வந்துகொண்டு, பெரும்பாலான நேரம் ஓய்வெடுத்துக் கொண்டிருந்தார். காயத்ரியில் காலையும், மாலையும் வருகை புரிந்தவர்களுடன் நேரத்தைச் செலவிட்டு, அடிக்கடி சத்சங்கங்கள் நடத்தினார். அவர் மெரினா கடற்கரைக்கும் சென்று, அப்யாசிகளுடன் அளவளாவி, அவர்கள் கேள்விகளுக்குப் பதில் அளித்தார். அப்யாசியின் பங்கு பற்றியும், வாழ்க்கையின் எதிர்பார்ப்புக்கள் பற்றியும் கேட்டபோது," என்ன செய்ய வேண்டுமோ அதை எந்தவித எதிர்பார்ப்பும் இன்றி செய்யுங்கள். அதுவே கர்மயோகத்தின் சாராம்சம் ஆகும்" என்று மிக உறுதியாகக் கூறினார். ஒரு மணிநேரம் வேடிக்கையாகப்பேசி, கேள்விகளுக்குப்பதில் அளித்து, ஐஸ்கிரீம் சாப்பிட்டபின், அவர் புறப்பட்டபோது, பார்த்துக் கொண்டிருந்த அப்யாசிகள், நேரம் அப்படியே நின்று விட்டால், அவர்கள் மாஸ்டருடன் இன்னும் அதிக நேரம் இருக்கலாமே என்று நினைத்தனர். பள்ளிக்கூடத்திற்குச் சிலமுறை வருகை தந்து பின் ஜூலை அ அன்று, அவர் கொல்கத்தா புறப்பட்டுச் சென்றார்.

### சிலிகுரி, மேற்குவங்காளம்

ஜூலை 9 மற்றும் 11 அன்று, மாஸ்டர் சிலிகுரி மையத்திற்கு வருகை புரிந்தார். உள்ளூர் அப்யாசிகள், மற்றும் நேப்பால் உட்பட்ட, அருகில் உள்ள பல மையங்களிலிருந்து வந்திருந்தவர்கள், பாக்டோக்ரா வந்தடைந்த மாஸ்டரை வரவேற்றனர்.







குடியரசு நேப்பாலில், சமீபத்தில், நம் மிஷன் பதிவுசெய்யப்பட்டது. மாஸ்டர், மிஷனின் நிர்வாகிக்களுக்கான தமது செய்தியில், "நேப்பால் நாட்டு மக்கள், இதை உணராமல் இருந்தாலும், இன்றைய நாள் கண்டிப்பாக அவர்களுக்குச் சிறப்பான நாளாகும். நேர்மையுடனும், அன்புடனும், ஆழ்ந்த ஈடுபாட்டுடனும், அங்குள்ள மக்களுக்கு ஆன்மீகத் தொண்டு புரிய, நம்மை நாம் தயார் படுத்திக் கொள்ள வேண்டும்" என்று எழுதியுள்ளார். அதன் காரணமாக நேப்பாலின் இயக்குனர் குழு, மற்றும் அங்கத்தினர்களின் முதல் பொதுக்கூட்டம், ஜூலை 10 அன்று, சிலிகுரி ஆசிரமத்தில் நடைபெற்றது.

11ம் தேதி காலை, மாஸ்டர் தியானக்கூடத்தைத் திறந்துவைத்தார். அப்போது ஆற்றிய உரையில் மாஸ்டர், அப்யாசிகளின் வெளிப்புற மற்றும் நடத்தையில் ஏற்படவேண்டிய மாற்றத்தின் அவசியத்தை வலியுறுத்தினார். இம்மாற்றம் வரும்வரையில், மற்ற அனைத்துமே வீண் என்றும் கூறினார். மேலும், "மனிதர்களாக நாம் முன்னேறவே இல்லை என்பதை, கடந்த 40 வருடங்களாக, நான் சகஜ மார்க்கத்தில் கவனித்துக்கொண்டு வருகிறேன். நீங்கள் உள்ளே என்னவாக இருக்கிறீர்களோ, அந்த ஆன்மீக நிலைமையை மாஸ்டர் அறிவார். ஆனால், நாம் வெளியே எவ்வாறு இருக்கிறோமோ, உள்ளேயும் அதேபோல் இருக்கும் வண்ணம், உள்ளும், புறமும் சமநிலையில் இருக்கவேண்டும், நினைவும், செயலும் சமநிலையில் இருக்கவேண்டும், எதைக் கூறுகிறோமோ அதைக்கருத வேண்டும், எதைக் கருதுகிறோமோ அதைக் கூறவேண்டும். இவைதான் சகஜமார்க்கத்தின் நிலையான அடிப்படைக்கொள்கைகள் ஆகும்.

நமது பிரிசெப்டர்கள், ஒரு அப்யாசியின் இந்த அடிப்படைத் தேவைகளை வலியுறுத்துவதில்லை என நான் கருதுகிறேன்.

சிலிகுரி ஆசிரமத்தில் உணவும், தங்கும் இடமும் இலவசமாக அளிக்கப்படும் என்றும், அவை சகஜ மார்க் ஸ்பிரிசுவாலிடி ஃபௌண்டேஷனால் வழங்கப்படும் என்றும் அறிவித்தார். கிழக்கு, வடகிழக்கு மாநிலங்களின் அனைத்து அப்யாசிகளும், இந்த ஆசிரமத்தை ஒரு ஏகாந்த இடமாகப் பயன்படுத்திக் கொள்வார்கள் என்றும், குறைந்தது 3-4 மாநிலக்கூட்டங்களாவது இருக்கும் என்றும் தான் நம்புவதாகத் தெரிவித்தார்.

11ம் தேதி மதியம், மாஸ்டர் கொல்கத்தாவிற்குப் புறப்பட்டுச் சென்றார். கொல்கத்தா ஆசிரமத்தில் தங்குவதற்கு முன்பாக, சகோ. அஜய்பட்டர் இல்லத்தில், 2 நாட்களைக் கழித்தார். ஜூலை 14 முதல் 19 வரை, ருஷ்யா மற்றும் வேறு CIS நாடுகளைச் சேர்ந்த சுமார் 300 அப்யாசிகளுக்கான ஒரு ஆய்வரங்கு நடைபெற்றது. தினமும் காலை 6 மணி முதல் இரவு 9 மணி வரை, சத்சங்கங்கள், தனி சிட்டிங்குகள், பல வேறு பொருள்களைப்பற்றிய உரைகள், மற்றும் குழுக்கலந்துரையாடல்கள் ஆகியவை நடைபெற்றன. மாலை நேரங்களில், காட்டேஜ் புல்வெளியில், மாஸ்டர் அப்யாசிகளுடன் தன் நேரத்தைச் செலவிட்டார். அவர், கேள்விகளுக்கு பதில் அளித்து, சந்தேகங்களைத் தீர்த்துவைத்து, பல சிறு கதைகளையும் கூறினார். அவை அனைத்தும் ஆழ்ந்த உபதேசங்களை வெளிப்படுத்தின.

இந்த ஆய்வரங்கின் போது, "மாற்றத்திற்கு விருப்பப்படுதல்", "சகஜமார்க்கப் பயிற்சிமுறை", மற்றும் "எண்ணத்தின் சக்தி" போன்ற பல பொருள்களில், அப்யாசிகள் உரையாற்றினர். இந்த உரைகள், பயிற்சிமுறையின் நுண்ணிய விவரங்கள், மற்றும் தினசரி வாழ்க்கையில் அதன் தாக்கம், ஆகியவற்றின் முக்கியத்துவத்தை வெளிப்படுத்தின.

வருகை புரிந்திருந்த அப்யாசிகள், ஒத்துழைப்பு மற்றும் சகிப்புத்தன்மைக்கு ஒரு அளவு கோல் அமைத்தனர். கொல்கத்தாவின் வெப்பமான, புழுக்கமான சீதோஷ்ணநிலையும், அதனால் ஏற்படும் உடல் நிலைக் கோளாறுகளும், அவர்களுக்கு சவாலாக இருந்தன. எனினும், இவை எதுவும், மாஸ்டருடன் இருக்கவேண்டும் என்ற தங்கள் வருகையின் நோக்கத்தைப் பாதிக்காதவகையில் உறுதியுடன் இருந்தனர்.



## ஜெய்பூர்

லக்னௌ விழாவிற்குப்பின், மாஸ்டர், டில்லியில் சிறிது நேரம் தங்கி, பின் குர்காவிலிருந்து சாலைவழியே, ஜூலை 29 அன்று ஜெய்பூர் சென்றடைந்தார். சுமார் 300 அப்யாசிகள் மாஸ்டரை வரவேற்றனர். அங்கு போய்ச்சேர்ந்ததும், புதிதாகக் கட்டப்பட்டுள்ள காட்டேஜைத் திறந்து வைத்தார். கட்டுமானம் பற்றிய பல விவரங்களைக் கேட்டுக் கொண்டே, காட்டேஜைச் சுற்றிப்பார்த்தார். சாலைவழியே பயணம்செய்யும்போது புத்துணர்வுடன் இருப்பதாகவும், ஆனால் ஒருமணிநேர விமானப்பயணத்தில் கூட மிகவும் களைத்துவிடுவதாகவும் அவர் கூறினர். வராண்டாவில் இருந்த ஊஞ்சலில் அமர்ந்தவண்ணம், அங்கு கூடியிருந்த அப்யாசிகளுடன் அளவளாவினார்.

மாலையில் மாஸ்டர், காட்டேஜில் இருந்து வெளியே வந்து ஒருமணிநேரம் புல்வெளியில் அமர்ந்திருந்தார். சாதாரணமாக உரையாடிக் கொண்டிருந்தபோது, தான் எல்லா சூழ்நிலையிலும்






ஜெய்பூரில் தியானம்


ஜெய்பூர்: காட்டேஜ்

மகிழ்ச்சியாக இருப்பதாகக் கூறினார். ஒருவர் எப்பொழுதும், எல்லா சூழ்நிலையிலும் மகிழ்ச்சியாக இருக்க வேண்டும்.

30ம் தேதியன்று, மாஸ்டர் புதிய தியானக்கூடத்தைத் திறந்து வைத்து, அதை அவரது குரு, பாபுஜி மகராஜுக்கு அர்ப்பணித்தார். ராஜஸ்தான், வெளிநாடுகள் மற்றும் அண்டை மாநிலங்களில் இருந்து வந்திருந்த சுமார் 1500 அப்யாசிகளுக்கு, காலை 9 மணிக்கு சத்சங்கம் நடத்தினார். சத்சங்கத்திற்குப்பின், கால்ஃப்வண்டியில் ஆசிரமத்தைச் சுற்றிப் பார்வையிடச் சென்றார். கிராமப் பஞ்சாயத்து தலைவரும், மற்றவர்களும், தங்கள் பாரம்பரிய முறையில் மாஸ்டரை வரவேற்றனர். அவர், அனைவருக்கும் பிரசாதம் வழங்கி ஆசீர்வதித்தார்.

மாலையில், மாஸ்டர் புல்வெளியில் அமர்ந்து, சுமார் ஒரு மணிநேரம், அப்யாசிகளிடம் பேசிக் கொண்டும், குழந்தைகளின் கவிதை, மற்றும் பாட்டுக்களைக் கேட்டுக்கொண்டும், அப்யாசிகளின் வினாக்களுக்கு விடை கூறிக் கொண்டும் இருந்தார்.

31ந் தேதி காலை, அவர் சத்சங்கம் நடத்தினார். மாலை, 200க்கும் அதிகமாக வந்திருந்த வெளிநாட்டு அப்யாசிகளைத் தன் காட்டேஜுக்கு அழைத்து சிட்டிங் கொடுத்தார்.

ஆகஸ்ட் 1ம் தேதி, மாஸ்டர் காலை சத்சங்கம் நடத்திய பின், சகோதரி ரஞ்சனாவின் பஜன்களைக் கேட்டார். பின் உரையாற்றினார். சிறிது நேரம் ஆசிரமத்தையும், அதனருகில் உள்ள 'மாஸ்டர்'ஸ் கிரியேஷன்' என்ற காலனியயும் சுற்றிப்பார்த்தார். ஆசிரமம் 10 ஏக்கர் பரப்பிலும், காலனி 20 ஏக்கர் பரப்பிலும் உள்ளன.

பகற்பொழுதில், தொடர்ந்து பல அப்யாசிகளைச் சந்தித்தார். பிற்பகல் சுமார் 3 மணிக்கு, மும்பைக்கு விமானத்தில் செல்ல புறப்பட்டார். இங்கு தங்கிய சமயத்தில், தன் அலுவகத்தில், மின்னஞ்சல்களுக்குப் பதிலளித்தும், மற்ற நிர்வாக வேலைகளைக் கவனித்தும், மற்றும் சில பிரிபெக்ட்டுக்கள் தயார் செய்தும். மிக மும்முரமாக வேலை பார்த்தார்.

## மும்பை

மாஸ்டர், ஆகஸ்ட் 1ம் தேதி மும்பைக்கு வருகை புரியத் தீர்மானித்தபோது, மும்பை அப்யாசிகள் திகைப்பூட்டும் மகிழ்ச்சிக்கு உள்ளானார்கள். பலரும், அப்போதுதான் லக்னௌவிலிருந்து திரும்பி இருந்தனர். பலத்தமழையின் நடுவே, அனைத்து ஏற்பாடுகளும் நடக்க, அனைவரும் மாஸ்டரை வரவேற்கத் தயாரானார்கள். மும்பை மற்றும் பக்கத்து மையங்களில் இருந்து, சுமார் 1500 அப்யாசிகள், பன்வேல் ஆசிரமத்தில் கூடினர்.

ஜெய்பூரில் இருந்து மாலை 7.20க்கு வந்த மாஸ்டர், நேராக ஆசிரமத்திற்குச் சென்றார். பிரத்யேகமாகத் தயாரிக்கப்பட்டிருந்த பாடல் ஒன்றுடன், ஆர்வமிக்க இளைஞர் குழுவால், மாஸ்டருக்கு நல் வரவேற்பு அளிக்கப்பட்டது. அனைவர் மத்தியிலும் இருந்ததால், அவர் மகிழ்ச்சியாகவும், உற்சாகமாகவும் காணப்பட்டார். அவருக்கு ஒய்வு தேவை என்பதையும் தவிர்த்துவிட்டு, முதலில் தான் தன் அப்யாசிகளுடன் இருக்கவேண்டும் என்று கூறினார். அவர் உணவுக்கூடத்திற்கு வந்து தங்களின் அன்புக்குரியவரைக் காணக்காத்திருந்த அப்யாசிகளின் ஏக்கத்தைப் பூர்த்திசெய்தார்.

மறுநாள் காலை, மாஸ்டர், தியானக்கூடத்தை அடுத்து இருந்த மாடியில் அமர்ந்து அனைவரையும் திகைக்கவைத்தார். குளிர்ந்த காற்றைச் சிறிது நேரம் அனுபவித்துவிட்டு, நேராக தியானக்கூடத்திற்குச்சென்று, 1மணி நேரம் சத்சங்கம் நடத்தினார். நாள்முழுவதும், அப்யாசிகளைச் சந்திப்பதும், தன் வேலைகளைக் கவனிப்பதுமாக, மும்முரமாக இருந்தார். மாலை 3.30 மணிக்கு, ஒரு தேநீர் விருந்துக்காக, அப்யாசிகள் அவரை உணவுக்கூடத்திற்கு அழைத்தனர். மாஸ்டர் அனைவருடனும், அரை மணிநேரத்திற்கு அமர்ந்து, காபியுடன் வழங்கப்பட்ட சிற்றுண்டிகளை ருசித்து மகிழ்ந்தார். மாஸ்டர் அதன்பின், மாலை 5.30 மணிக்கு சத்சங்கம் நடத்தினார்.

3ம் தேதி காலை 7.30 மணிக்கு சத்சங்கம் நடத்திய பிறகு, ஒரு திருமணத்தை நடத்தி வைத்து ஆசீர்வதித்தார். எளிமை மற்றும் மனநிறைவு ஆகியவற்றின் தேவை குறித்து, ஆழ்ந்த, சிந்தனையைத் தூண்டும் விதத்தில் உரையாற்றினார். பின்பு அவர், தனிப்பட்ட முறையில் சில இடங்களுக்குச் சென்றுவிட்டு, ஆகஸ்ட் 5ம் தேதி சென்னைக்குப் புறப்பட்டார்.

## சென்னை

சென்னை திரும்பியபின், 8ம் தேதி ஞாயிறு அன்று, மாஸ்டர் சத்சங்கம் நடத்தினார். அப்யாசிகளின் முகத்தில் மகிழ்ச்சி தெளிவாகத் தெரிந்தது. 9ம் தேதி மாஸ்டர் காயத்ரிக்குச் சென்றார். மாலை நேரங்களில், ஒரு அப்யாசியின் கடமை, போன்ற பல விஷயங்கள், மற்றும் பல்வேறு நாகரீகங்கள் குறித்து கலந்துரையாடினார்.

14ம் தேதி மாலை, அவர், LMOIS விடுதிக்குச் சென்று, மாணவர்களுடன் இரவு உணவு உண்டார். மாஸ்டர் மிக உற்சாகமாக இருந்தார். மாணவர்களின் கேள்விகளுக்குப் பதில் அளித்து, உரையாற்றி, அனைத்துப்பள்ளி பாட்டுப் போட்டியில் வெற்றி பெற்று வந்திருந்த மாணவர் குழுவின் ஒரு பாடலை ரசித்து, மிக அதிகமான நேரத்தை அவர்களுடன் செலவிட்டார். பாட்டின் முக்கியத்துவத்தைப் பற்றிக் கூறிய அவர், அது ஆன்மாவிற்கு ஊட்டமளிக்கவல்லது என்றும், பள்ளியில் நிறைய சங்கீதம், பாடல் எல்லாம் இருக்கும் என்ற தன் நம்பிக்கையையும் தெரிவித்தார். அனைவரும், மாஸ்டருடன் பங்கு கொண்ட இந்த நேரத்தால், ஆழ்ந்து ஆசீர்வதிக்கப்பட்டதாக உணர்ந்தனர்.

ஆகஸ்ட் 16- 20வரை நடைபெற்ற, வட அமெரிக்க அப்யாசிகள் ஆய்வரங்கிற்கு, 800க்கும் மேற்பட்ட அப்யாசிகளும், 200 குழந்தைகளும், வட அமெரிக்காவிலிருந்து, மணப்பாக்கத்திற்கு வந்திருந்தனர். மாஸ்டரின் பிரசன்னத்தில் சத்சங்கங்கள், மற்றும் அவரது உரைகள் ஆகியவை, இக்கூட்டத்தின் முதன்மையான கவனத்திற்கு உரிய விஷயங்கள் ஆகும். சகோ. கண்ணன், சகோ. P.R, கிருஷ்ணா அவர்களின் உரைகள், SRCM- USA மற்றும் SRCM கனடா ஆகியவற்றின் வருடாந்திர நிர்வாகிகள் கூட்டம், புது


பன்வேல் ஆசிரமம்


LMOIS விடுதி மாணவர்களுடன்




அப்யாசிகளுடன் மாஸ்டருடன் சந்திப்பு, பிரிபெக்டுக்கள் மற்றும் செயற்குழுக்களின் சந்திப்பு, ஒமேகா பள்ளிக்குச் சென்று பார்வையிடுதல், வினா-விடை நிகழ்ச்சிகள், மற்றும் வட அமெரிக்க அப்யாசிகள், குழந்தைகள் அளித்த கலை நிகழ்ச்சிகள் ஆகியவை, இந்த ஆய்வரங்கத்தின் மேலும் சில முக்கியமான அம்சங்கள் ஆகும்.

ஒரு தேவதையின் கதையில் வருவது போல், ஒரு மந்திர சக்தி உருவாக்கப்பட்டு, முதல் சிட்டிங்கில் இருந்தே, உபயோகமற்ற எண்ணங்களும், இல்லத்தின் கவலைகளும், மிக சுலபமாக வெளியேற உதவியது போல் இருந்தது. USA நிர்வாகக் கூட்டத்தில் மாஸ்டர் பேசியபோது, "அபரிமிதமான வாய்ப்புகள் நமக்காக இருப்பதையும், அதனை நாம் கைப்பற்றிக் கொள்ளவேண்டுமேயன்றி, சேகரித்து வைத்துக்கொள்ளக்கூடாது......கொட்டைகளைக் கண்டெடுத்து, அவற்றை எங்கோ புதைத்து வைத்துவிடும் அணில்கள், அநேகமாக குளிர் காலத்தில், பனியில், தாங்கள் சாப்பிட்டாமல் திரட்டிய கொட்டைகள் மீதே இறந்து காணப்படும்", என்று கூறினார்.

கூட்டம் நடந்த நாட்கள் அனைத்திலும், அனைவரும் ஜோதியின் அருகில் செல்ல அனுமதி அளிக்கும் வகையில், மாஸ்டரின் காட்டேஜ் கதவுகள், அவ்வப்போது திறந்தே வைக்கப்பட்டிருந்தன. இந்த செய்கையானது, பெருந்தன்மையானதாகவும், படிப்பினை ஊட்டுவதாகவும், எப்படி நம் குறிக்கோளைத் தெளிவாக உணர்ந்து கொள்ளவேண்டும் என்று கூறுவது போலும் இருந்தது. சகோதர சகோதரியரே, உங்கள் தேசங்களை மாற்றுவது, உங்களிடம் தொடங்கி, உங்களிடமே முடிகிறது. உங்கள் இதயங்களை நன்கு முழுமையாகத் திறந்து விடுங்கள். அவற்றை ஒரு போதும் மூட அனுமதிக்காதீர்கள். அப்யாசிகளின் இதயங்கள், அவரது அன்பால் நிறைந்து, அவரது பிரசன்னத்தில் இன்னும் பலமணி நேரம் இருக்கும் ஏக்கத்துடன், இக்கூட்டம் ஆகஸ்ட் 20வெள்ளியன்று முடிவடைந்தது.


## புதிய வெளியீடுகள்

ஜெர்மனியைச் சேர்ந்த சகோதரி பிரிகிட் ஸ்மித் அவர்களால், படவிளக்கங்களுடன் எழுதப்பட்ட, சகஜ மார்க்கத்தின் பத்து நியமங்களை எளிய வார்த்தைகளில் தெரியப்படுத்தும் ஒரு புத்தகம். குழந்தைகளுக்கும் பெற்றோர்களுக்குமான இது, உண்மையிலேயே கலைநயத்துடன் கூடியதொன்றாகும்.








ஹி, ஹூக்கா & ஐ தொடரின் இரண்டாம் பாகமான "ஹபுள் பபுள்" என்ற புத்தகம், மராத்தி, குஜராத்தி, கன்னடம், தமிழ், தெலுங்கு, மற்றும் மலையாளம் ஆகிய, ஆறு இந்திய மொழிகளில் வெளியிடப்பட்டுள்ளது.





வாட் இஸ் சகஜ் மார்க் ஸ்பானிஷ்





இன் ஹிஸ் புட் ஸ்டெப்ஸ்-வால்யூம்- 1 இத்தாலியன்





பிரிபெக்ட் டைரக்டரி




கால் ஆஃப் ஸ்பிரிசுவாலிடி-வால்யூம் 1&2- ஆங்கிலம்





ரோல் ஆஃப் மாஸ்டர் இன் ஹ்யூமன் எவல்யூஷன்-அஸ்ஸாமிஸ்





குரு ஔர் லக்ஷ்ய ஹிந்தி




தில் கி ஆவாஜ் 2005 ஹிந்தி





ரியாலிடி அட் டாண் நேப்பாலி




லீவ்ஸ் ஃப்ரம் தி ட்ரீ ஆஃப் லைஃப் ஆங்கிலம்




பிரிசெப்டர்ஸ் ஜர்னல்




யூத் டைரி

ஸ்ரீ ராம் சந்த்ர மிஷன்®
எக்கோஸ் இந்தியா செய்திமடல்

## கடந்த காலத்தைப்பற்றிய ஒரு கண்ணோட்டம்





### பூஜ்யஸ்ரீ லாலாஜி மகராஜின் பிறந்த நாள் விழா, சென்னை 1973.

மாஸ்டர் இவ்விழாவைப் பற்றி, "அவரது அடிச்சுவடிகளில்"(2ம் பாகம்) என்ற புத்தகத்தில் அழகாகக் குறிப்பிடுகிறார். மாமியின் பிரார்த்தனையுடன் விழா துவங்கியது. பின், மாஸ்டர், மல்லிகை,ரோஜாப்பூக்கள் கொண்ட மாலையை, பாபுஜிக்கு அணிவித்தார். லாலாஜியின் "Truth Eternal" புத்தகத்தின் சிறப்பு வெளியீடு இருந்தது. ரூ.10 விலையுள்ள இப்புத்தகத்தின் 500 பிரதிகளும் உடனேயே விற்றுப்போயின.

விழாவில், பாபுஜி அருட்செய்தியை வாசித்ததை மாஸ்டர் நினைவு கூர்ந்து, "அவர் 20நிமிடங்கள் வாசித்த உரையில், லாலாஜி பற்றிய குறிப்புக்கள் வந்த இரு இடங்களில் உணர்ச்சி வசப்பட்டார். கண்ணீரைத் துடைக்க, உரையை நிறுத்தி, மீண்டும் தொடர வேண்டியதாயிற்று. அவருக்குத்தான் தன் மாஸ்டரிடம் எவ்வளவு அன்பும் பக்தியும் உள்ளது! நம் மாஸ்டர் மீது நாம் அவ்வாறு இருக்கமுடியுமா?" என்று எழுதுகிறார்.

பாபுஜியின் செய்திகள், நம் இதயங்களுள் ஆழ்ந்து சென்று, வாழ்க்கையின் உண்மையான குறிக்கோளையும், நம் அன்புக்குரியவருடன் நமக்கு உள்ள நிரந்தரத் தொடர்பையும் நினைவூட்டுகின்றன.

இவ்விழாவின் ஏற்பாடுகளைக் கண்டு பாபுஜி மகிழ்ந்ததைப் பற்றி, மாஸ்டர், பிப்ரவரி 27,1973 அன்று எழுதுகிறார்: "மாலையில், மாஸ்டர் "காயத்ரி"க்கு வந்தார். தனிமையில், என்னை அணைத்துக்கொண்டு, "நீ ஒரு மிகப்பெரிய வேலையைச் செய்து முடித்து இருக்கிறாய். நான் மிக மகிழ்ச்சியாக உள்ளேன்," என்று கூறினார்." நம் அன்பு, பக்தி, பொறுப்புணர்வு மூலம், நமது மாஸ்டர் இதயத்தில், இத்தகைய மகிழ்ச்சியைக் கொண்டுவர, நம்பிக்கையுடன் பிரார்த்திப்போம்.

இவ்விழாவில் பாபுஜி மகராஜ் அருளிய உரையின் சாராம்சம்:

"மாஸ்டருள் மட்டுமே ஆழ்ந்திருக்க, இவ்விழாவை நாம் பயன்படுத்திக் கொள்ளவேண்டும். அது நம் ஆன்மீக முன்னேற்றத்திற்கு உணவாகவும், ஊக்கமருந்தாகவும் செயல்படும். எங்கும், எல்லாவற்றிலுமிருந்தும், அந்த நினைவின் எண்ணம் கசிந்து வரும் வண்ணம், நம் நினைவு இருக்கவேண்டும். அதுதான் மனிதர்கள் கொள்ளும் உண்மையான நினைவும், நம் நன்மைக்கான செயலும் ஆகும்."

"தன் சங்கடங்களை ஒருவன் சுலபமாகத் தீர்க்க, அவன் தன் மனதிற்கு சரியான ஆலோசனைகள் தர வேண்டும். இது பயிற்சியாலும், தன்னை ஒழுங்காக வடிவமைத்துக்கொள்வதாலும் வரும் நிலையாகும். தன் தெய்வீக நிலையில் நிலைத்திருப்பது மிக சுலபம். அதுதான் பரிணாம வளர்ச்சிக்கு உறுதியான முறையாகும். உண்மைநிலை அறிய ஒரு சிறு ஆர்வம் இருந்தாலும், அது எதிர் காலத்தை சிறப்பாக ஆரம்பிக்கும்."

## அனைத்திந்திய கட்டுரை எழுதும் நிகழ்ச்சி - 2010

ஐக்கியநாடுகளின் பன்னாட்டு இளைஞர் ஆண்டை (UN International year of youth)(ஆகஸ்ட்2010-2011) முன்னிட்டு, SRCMம்மும் United Nations Information centre for India & Bhutan னும் சேர்ந்து இந்நிகழ்ச்சியை நடத்துகின்றன. மாணவர்கள், ஆங்கிலம், குஜராத்தி, ஹிந்தி, கன்னடம், மலையாளம், மராத்தி, தமிழ் மற்றும் தெலுங்கு மொழிகளில் கட்டுரை எழுதலாம். மற்ற விவரங்களுக்கும், எவ்வாறு பங்கேற்பது என்பதைப்பற்றி அறியவும், தங்கள் பள்ளி / கல்லூரி தலைவரை அணுகவும்.

essay2010@sahajmarg.org என்ற மின்னஞ்சல் மூலமும் பெறலாம். மிஷனின் இணைய தளத்திலிருந்து, கட்டுரை பற்றிய குறிப்பு வெளியீட்டையும், பிராந்திய ( ஆங்கிலம், குஜராத்தி, ஹிந்தி, கன்னடம், மலையாளம், மராத்தி, தமிழ், மற்றும் தெலுங்கு) மொழிகளில் கையேடுகளையும் பெற்றுக் கொள்ளலாம்.

"நற்குணம் வாழ்க்கையைப் பாதுகாக்கிறது"
(6-9ம் வகுப்பு வரை)

"சுதந்திரம் என்றால் எதைச் செய்வதற்கும் தரப்பட்ட அனுமதி என்று பொருளல்ல, எது சரியோ, அதைத் தனக்காகத் தேர்ந்தெடுக்கும் விவேகமாகும் அது."
(10-12ம் வகுப்பு வரை)

"பேராவலிலிருந்து (ambition) உயர்ந்த குறிக்கோளுக்கான விழைவும்(aspiration) பொருள் சேகரித்தலிலிருந்து உயர்வான ஒன்றாக ஆவதும்"
(இளநிலை மற்றும் முது நிலைப் பட்டதாரிகள்)

## புது நியமனங்கள்

வணக்கத்திற்குரிய மாஸ்டர் 2010ம் வருடம், ஆகஸ்ட்24 ம் தேதி கீழ்கண்ட நியமனங்கள் செய்தார்.

**சகோ.P.C.ஜோஹரி**
மேனேஜர் சிலிகுரி ஆசிரமம்.

**சகோ.S.S.முர்கோத்**
மேனேஜர், CREST, பெங்களூரு.

## தகவல் பரிமாற்ற வழிமுறைகள்

அனைத்து அப்யாசிகளும் மாஸ்டருடன் தகவல் பரிமாறிக்கொள்ள http://www.sahajmarg.org/resourses/correspondence-guidelines என்ற வலைத்தளத்தில் கூறிய முறைகளைப் பின்பற்றும்படி கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

## மொழிபெயர்ப்பாளர்கள் தேவை

எக்கோஸ் இந்தியா குழு, தன் பதிப்புக்களை ஆங்கிலத்திலிருந்து, ஹிந்தி, மராத்தி, குஜராத்தி, பெங்காலி, தெலுங்கு, தமிழ், கன்னடம் மற்றும் மலையாள மொழிகளில் மொழிபெயர்க்க தன்னார்வத்தொண்டர்களை வரவேற்கிறது. மொழிபெயர்ப்பதுடன், அவற்றை கணினியில் டைப் செய்யவும் தெரிந்திருப்பது அவசியம்.
தயவு செய்து, உங்களைப் பற்றிய விவரங்கள், ஒதுக்கமுடிகின்ற நேரம், கணினியில் திறமை முதலியவற்றைப்பற்றி, in.newsletter@srcm.org மின்னஞ்சலுக்கு எழுதவும்.

ஸ்ரீ ராம் சந்த்ர மிஷன்®
எக்கோஸ் இந்தியா செய்திமடல்

# அறிவையும் பயிற்சியையும் மேம்படுத்துதல்



எல்பர்கா

## வடக்கு கர்நாடகா

புது அப்யாசிகள் பயிற்சித்திட்டத்தொடர் பசவகல்யாண், பீஜப்பூர், கடக், குல்பர்கா, ஹுப்ளி, தார்வார், பேலூர், கல்லூர் மற்றும் நவ்நகர் ஆகிய நகரங்களில் நடைபெற்றது. சகோ.நிஜலிங்கப்பா, டாக்டர். கஜேந்தர் சிங், சகோ.அஜித்காமத், சகோதரி சுஜாதா நாவலே, சகோதரி கீதா, சகோ.பிரகலாத் பக்னிகர், சகோதரி கீதா ராஷ்மி, மற்றும் சகோ.ராஜுகஷம்பூர்கர் முதலியவர்களால் நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டன. ஒலி, ஒளி உபகரணங்கள் மூலமும், மற்றும் SMRTI கன்னட மொழியில் தயாரித்த பயிற்சித்திட்டத்தைக் கொண்டும், நிகழ்ச்சிகள் நடைபெற்றன. சகஜமார்க்க சாதனாவின் அடிப்படை, தியானம், சுத்தகரிப்பு, நாட்குறிப்பு எழுதுதல், பிரார்த்தனை, பண்டாராக்கள், மிஷனின் குறிக்கோள், மாஸ்டர்களைப்பற்றிய ஒரு முன்னுரை, மற்றும் மிஷனின் பல கிளைகளான SMSF, SMRTI, CREST, Retreat Centres முதலியன பற்றியும் அவைகளின் பணிகளைப்பற்றியும் விளக்கமளிக்கப்பட்டது.



பசவகல்யாண்




கடாக்

## ஆந்திரப்பிரதேசம்

ஜூலை 18ம் தேதியன்று, கர்நூலில் அப்யாசி பயிற்சித்திட்டத்தின் முதல்நிலை, முழு நாள் நிகழ்ச்சியாக நடத்தப்பட்டது. இதில் 21 அப்யாசிகள் கலந்து கொண்டனர். பெரும்பாலானோர் இள வயதினராகவும், ஒரு வருடமாக சகஜ மார்க்க அப்யாசிகளாகவும் உள்ளனர். இத்திட்டம் மிக ஊக்கத்துடன் வரவேற்கப்பட்டது. மாஸ்டரின் ஒலி, ஒளித் தகடு மூலம் அளிக்கப்பட்ட விளக்கங்கள் சாதனாவைப்பற்றிய தங்கள் கேள்விகளுக்கெல்லாம் விடை கிடைத்ததாக உணர்ந்தனர். அவர்கள் இத்திட்டம் மிகவும் பயனுள்ளதாக இருந்ததெனவும், SMSF, CREST, Retreat Centres முதலியன பற்றி தெளிவாக தெரிந்து கொண்டதாகவும் கூறினர்.



கர்நூல்

எம்மிகனூர் நகர மையத்தில், அப்யாசி பயிற்சித்திட்டத்தின் முதல் நிலை, முழு நாள் நிகழ்ச்சியாக ஆக. 8ம் தேதி நடத்தப்பட்டது. இதில் 30 அப்யாசிகள் கலந்து கொண்டனர். எம்மிகனூர், 80 அப்யாசிகளுடன் கூடிய ஒரு புது மையமாக பரிணமிக்கிறது. இதில் பங்கேற்றவர்கள், கடந்த ஒரு வருடத்திற்குள்ளும் அதற்கு மேலேயும் அப்யாசிகளானவர். இந்நிகழ்ச்சி முழுவதிலும், அப்யாசிகள், நன்கு கலந்துரையாடி பங்கேற்றனர். அனேக அப்யாசிகள் சாதனா தொடங்கியபின், பயிற்சியில் பங்கேற்பது இதுவே முதல் முறையாகும்.



எம்மிகனூர்

## தமிழ்நாடு

ஜூன் 25-27ம் தேதிகளில், திருப்பூரில் உள்ள, செட்டிபாளையம், யோகாஷ்ரமத்தில், மூன்று நாள் பயிற்சி முகாம் நடத்தப்பட்டது. தமிழ்நாட்டின் 19 மையங்களிலிருந்து, 69 அப்யாசிகள் இதில் கலந்து கொண்டனர்.

மண்டலப்பொறுப்பாளர் (த.நா-தெற்கு) சகோ.விச்வநாதராவ் வரவேற்புரை நிகழ்த்தினார். சகோ.தாணுமூர்த்தி, சகோதரி. ரம்யா ராம்பிரபு ஆகியோர், அப்யாசி பயிற்சி திட்டத்தை நடத்தி வைத்தனர். இதில் சகஜமார்க்க தியானம், சுத்தகரிப்பு, பிரார்த்தனை முதலானவை நன்கு விவரிக்கப்பட்டன. இரண்டாவது நாள் சகோ.ஆனந்த் 'ஒழுங்குமுறையும் கீழ்ப்படிதலும்' என்பதைப்பற்றியும், சகோ.ரவி சுப்பையா 'நிலையான நினைவு' பற்றியும் உரை நிகழ்த்தினர். பிற்பகல் நிகழ்ச்சியில், சகோ.ராதாகிருஷ்ணன் 'நம்பிக்கை' பற்றி சொற்பொழிவாற்றினார். மூன்றாம் நாள் ஞாயிறு சத்சங்கத்திற்குப்பின் சகோதரி ரம்யா 'பத்து நியமங்கள்' பற்றி பேசினார். சகோ.விச்வநாதராவ் மற்றும் சகோ.பிரகாஷின் ஊக்குவிக்கும் உரையாற்றல்களுக்குப்பின் விழா இனிதே முடிவடைந்தது. இந்நிகழ்ச்சி மிகுந்த பயனளித்தது என பங்கேற்றவர் கூறினர்.



திருப்பூர்

ஸ்ரீ ராம் சந்த்ர மிஷன்®
எக்கோஸ் இந்தியா செய்திமடல்

# ஒன்று கூடுதலும் வரவேற்புக்கூட்டங்களும்

## குல்பர்கா-வடக்கு கர்நாடகா

இல்லத்தில் ஒன்றுகூடும் நிகழ்ச்சி, சகோதரி ராதாபாய் குல்கர்ணியின் இல்லத்தில், ஜூன் 23ம் தேதியன்று நடைபெற்றது. ஆர்வமுள்ள ஆறுபேர் இதில் கலந்து கொண்டனர். சகோதரி மீரா குல்கர்ணி, சகஜ மார்க்கத்தின் பல்வேறு அங்கங்களைப்பற்றி விளக்கமளித்தார். சகோ.மனோகர் சிங், வினா-விடை நிகழ்ச்சி நடத்தினார். அதே நாளில் நால்வர் சாதனாவை ஆரம்பித்து விட்டனர். அந்நேரம் முழுவதும் அவ்வில்லம் மகிழ்ச்சிச்சூழலில் திளைத்திருந்தது.

கங்காவதி தாலுகாவிலுள்ள எல்பர்காவில், ஜூலை 11ம் தேதி மாலை சத்சங்கத்திற்குப்பின், ஒரு வரவேற்புக்கூட்டம் நடைபெற்றது. இதில் ஆர்வமிக்க 10 பேர் கலந்து கொண்டனர். சகோ.ராஜு கஷாம்பூர்கர், சகோ.ராஜு லால் மற்றும் சகோ.நிஜலிங்கப்பா ஆகியோர் உரையாற்றினர். உள்ளூர் பிரசெப்டரான சகோ.ருத்ரப்பாவும் இதில் கலந்து கொண்டார். பெரும்பாலானோர் சாதனா தொடங்க ஆர்வமுற்றவர்களாகக் காணப்பட்டனர்.

## சிக்மகளூர்- தென் கர்நாடகா.

ஆக. 11ம் தேதியன்று, சிக்மகளூர் அப்யாசிகளும், ஆர்வமுற்ற சிலரும் ஒரு அப்யாசியின் இல்லத்தில் ஒன்று கூடினர். சகோ.சத்யநாராயணா, சகஜமார்க்க முறை மற்றும் மூன்று 'M' பற்றி விளக்கமளித்தார். அது அப்யாசிகளை ஊக்கமுறச்செய்தது.

மாஸ்டரின் DVD திரையிடப்பட்ட பின், அப்யாசிகள் சகஜ மார்க்கத்தின் பல்வேறு அம்சங்ளை பற்றி எடுத்துரைத்தனர். சகோதரி மைனா, பழைய சகஜ தீப இதழிலிருந்து, மாஸ்டர், சிக்மகளூரில் உள்ள ஒரு அப்யாசியின் பண்ணை வீட்டிற்கு விஜயம் செய்ததைப்பற்றி வாசித்துக்காட்டினார். இதனால் உற்சாகமடைந்த சகோ. K.U.ஷெட்டி, பல பழைய நிகழ்ச்சிகளை நினைவு கூர்ந்து, மாஸ்டர், அப்யாசிகள் மீது எத்துணை அக்கறை கொண்டுள்ளார் என்பதை விவரித்தார்.

நிகழ்ச்சியின் முடிவில், அப்யாசிகள் தியானத்தில் உட்காரும்படியும், மிஷனுக்கு எவ்விதம் பணி புரிய முடியுமென சிந்திக்குமாறும் கேட்டுக்கொள்ளப்பட்டனர். ஒரு ஆசிரமம் கட்டவேண்டும் எனவும், இம்மாதிரியான இல்லக் கூட்டங்கள், ஒவ்வொரு மாதமும் நடைபெற வேண்டும் எனவும், சிலர் ஆலோசனை தெரிவித்தனர்.

# பயனுள்ள முழு நாள்


திருச்சூர்


இந்தூர்


ஹாசன்

## திருச்சூர், கேரளா

ஜூலை 4ம் தேதியன்று, யோகக்ஷேமம், திருச்சூரில் முழு நாள் நிகழ்ச்சி நடத்தப்பட்டது. காலை சத்சங்கத்திற்குப்பின், குழந்தைகள், நேர்மை மற்றும் உண்மையை வெளிக்கொணரும் வண்ணம் ஒரு சிறு நாடகம் நடத்திக்காட்டினர். ஒரு அரசன், தன் குடிமக்களில் நேர்மையானவனைத் தேடும் விதமாக இந்நாடகம் அமைந்தது. நம் வாழ்க்கையில் நேர்மையையும் உண்மையையும் கடைப்பிடிக்கவேண்டியதின் அவசியத்தை இது வெளிக்கொணர்ந்தது. குழந்தைகள், இதை எவ்வளவு ஆர்வத்துடன் செய்தனர் என்பதைக் கண்ணுறும்பொழுது, இப்பண்புகளை அவர்கள் எவ்விதம் மனதில் உள்வாங்கிகொள்கின்றனர் என அறிய முடிகிறது. அவர்கள், எதிர் காலத்தில், சகஜ மார்க்கத்தின் சிறப்பான அப்யாசிகளாக உருவெடுப்பர் என்பதில் ஐயமில்லை.

மாஸ்டரின் ஒலி/ஒளித்தகடு திரையிடப்பட்டது. அதில், எவ்வாறு வேதனை ஆன்மீகப்பயணத்தின் ஒரு அங்கமாக இருக்கிறது என மாஸ்டர் விளக்கியுள்ளார். சகோ T.P.நாராயணன், (மண்டலப்பொறுப்பாளர்) மாஸ்டரின் பேச்சை மலையாளத்தில் மொழிபெயர்த்தார். அப்யாசிகள், "Revealing the Personality' என்ற புத்தகத்திலிருந்து, பல சிந்தனைகளை வெளிக்கொணர்ந்தனர். 1993ம் வருட முதல் பதிப்பை படிக்கும் பொழுது, அதில் எழுதியிருப்பவை மேல்நாட்டு அப்யாசிகளுக்கு உரியதென எண்ணத்தோன்றும். ஆனால் 2009ல் பதிக்கப்பட்ட புத்தகத்தை படிக்குங்கால், உலகமயமாக்குவதின் பொருட்டு ஏற்பட்ட தற்காலச்சூழ்நிலையில், இது அனைவருக்கும் பொருந்துமென எண்ணத்தோன்றுகின்றது. இப்புத்தகம், ஒருவர், வாழ்க்கையில் எவ்விதம் நற்பண்புகளை கைக்கொள்ளமுடியும் என்பதை விவரிக்கிறது. இது பத்து நியமங்களின் வர்ணனையின் சாராம்சமாகும். அதுதான், நாம் நற்பண்புகளுடன் வாழ ஒரு அடித்தளமாகும். மாலை சத்சங்கத்துடன் நிகழ்ச்சிகள் யாவும் முடிவுற்றன.

## 'பத்து நியமங்கள்' மீது விவாதங்கள்- இந்தோர்.

சுமார் 27 அப்யாசிகள், ஒரு குழு அமைத்துக்கொண்டு, பத்து நியமங்கள் மீது விவாதங்கள் நடத்தி, அவற்றை வாழ்க்கையில் நடைமுறைப்படுத்த முயன்று வருகின்றனர். அவர்கள், ஒழுங்கு முறையாக ஒவ்வொரு நியமம் மீதும் விவாதம் நடத்தி வருகின்றனர். தங்களுக்குள் ஒருமித்த ஆர்வமிருப்பதை எல்லோரும் உணர்ந்துகொண்டிருக்கின்றனர். சகோ. அவினாஷ் கர்மர்கர் மற்றும் சகோ. ராஜேஷ் ராவேர்கர் இதை ஒருங்கிணைத்து நடத்தி வருகின்றனர்.

## ஹாசன், தென் கர்நாடகா

ஜூலை 11ம் தேதி ஞாயிறன்று, சகோ.ஸ்ரீநிவாஸ், மற்றும் சகோ.சுப்ரமண்யா சகஜ மார்க்கத்தைப் பற்றியும், அதன் வழிமுறை, மற்றும் குருவின் முக்கியத்துவத்தைப் பற்றியும் எடுத்துரைத்தனர். இரண்டாவது அமர்வில் சகோ.சுப்ரமண்யா நற்பண்புகளின் முக்கியத்துவத்தைப் பற்றியும், பத்து நியமங்களை வாழ்க்கையில் கைக்கொள்ளுவதின் அவசியத்தைப் பற்றியும் எடுத்துரைத்தார்.

பிற்பகல் அமர்வில் வினா விடை நிகழ்ச்சி நடை பெற்றது. அப்யாசிகள், தினசரி சாதனாவில் ஏற்படும் தங்கள் சந்தேகங்களை தீர்த்துக்கொண்டனர். சில அப்யாசிகள் தங்கள் அனுபவங்களைப் பகிர்ந்து கொண்டனர். மாலை சத்சங்கத்துடன் நிகழ்ச்சிகள் யாவும் நிறைவுற்றன.

ஸ்ரீ ராம் சந்த்ர மிஷன்®
எக்கோஸ் இந்தியா செய்திமடல்


பெங்களூர்


கஜியாபாத்

## குழு கலந்துரையாடல், முராதாபாத்

ஆகஸ்ட் 15அன்று, முராதாபாத் மையம், "யோகாஷ்ரம்" தியான அரங்கத்தில், ஒரு குழு கலந்துரையாடல் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. சத்சங்கத்தைத் தொடர்ந்து நடைபெற்ற இந்த கலந்துரையாடலில், 30 அப்யாசிகள் கலந்து கொண்டனர். சகோதரர் அமீத், இந்த நிகழ்ச்சியை ஒருங்கிணைத்தார். அப்யாசிகள் 7 குழுக்களாகப் பிரிக்கப்பட்டனர். லக்னோ உத்சவத்தில் மாஸ்டர் ஆற்றிய உரைகளான, சேவை மற்றும் சுயபரிணாமவளர்ச்சி ஆகியவை இந்நிகழ்ச்சிக்குத் தலைப்பாக எடுத்துக்கொள்ளப்பட்டன. ஒவ்வொரு குழுவினரும், தங்களுக்குள் நடந்த உரையாடலின் தொகுப்பு மற்றும் முடிவு பற்றி சில நிமிடங்கள் பேசினர். சகோதரத்துவம், அன்பின் கதகதப்பு, மற்றும் நம் மாஸ்டரின் மீதான நன்றியுணர்வு ஆகியவை நிரம்பியிருந்த இந்நிகழ்ச்சி, மிகவும் பயனுள்ளதாக இருந்ததாக பங்கேற்றவர்கள் உணர்ந்தனர்.

## பெங்களூர் தன்னார்வத்தொண்டர்களுக்கு நினைவு கூறத்தக்க வார இறுதி நாட்கள்

பெங்களூர் மையம், பரம் தாம், மண்டலம், மற்றும் பனசங்கரி என மூன்று ஆசிரமங்களால் ஆசீர்வதிக்கப்பட்டுள்ளது. அப்யாசிகளுக்கு, ஒவ்வொரு ஆசிரமத்திலும் தங்கள் நேரத்தைச் செலவிடவும், தன்னார்வத் தொண்டுகளில் ஈடுபடவும், மற்றும் ஆன்மீகச் சூழலில் இருக்கவும் ஒரு வாய்ப்பினைக் கொடுப்பதற்காக, "ஆசிரமத்தில் வார இறுதி நாட்கள்" என்னும் நிகழ்ச்சி திட்டமிடப்பட்டது. முதல் நிகழ்ச்சி ஜூன் மாதத்தில் மண்டல ஆசிரமத்திலும், அதனைத் தொடர்ந்து இரண்டாவதாக பனசங்கரி ஆசிரமத்தில் ஜூலை 10 மற்றும் 11 அன்றும் நடைபெற்றது.

அப்யாசிகள், தியான அரங்கம் மற்றும் அதனைச் சுற்றியுள்ள பகுதிகளைச் சுத்தப்படுத்துதல், காலையுணவு மற்றும் மதிய உணவு தயாரித்தல் போன்ற வெவ்வேறு செயல்களில் பங்கேற்றுக் கொண்டனர். நாளின் பிற்பகுதியில், சேவையின் பல்வேறு அம்சங்கள், மற்றும் தன்னார்வத் தொண்டில் ஈடுபடும்போது அப்யாசிகள் கொண்டிருக்க வேண்டிய மனோநிலை என்பவை பற்றிய அறிவூட்டும் விஷயங்கள் விவரிக்கப்பட்டன. ஞாயிற்றுக்கிழமை சத்சங்கத்தைத் தொடர்ந்து, பெங்களூர் மையத்தில் நடைபெற்றுக்கொண்டிருக்கும் பல்வேறு செயல்பாடுகளைப்பற்றிய விளக்கவுரை வழங்கப்பட்டது. அதனைத் தொடர்ந்து, பல அப்யாசிகள், தாங்களும் அச்செயல்களில் பங்காற்ற விரும்பும் ஆர்வத்தை வெளிப்படுத்தினர்.

பரம்தாமில், ஆகஸ்ட் 13 மாலையன்று இந்த நிகழ்ச்சி தொடங்கியது. அடுத்த இரண்டு நாட்கள், சுமார் 30 தன்னார்வத் தொண்டர்கள், உற்சாகத்துடன், குழந்தைகள் பூங்கா ஏற்படுத்த ஒரு பகுதியைச் சுத்தம் செய்தல், மழைநீர் வடிகட்டி மற்றும் நீர்த்தொட்டியை சுத்தம் செய்தல், சமையற்கூட வைப்பறை மற்றும் பரண் அடுக்குதல், தியானக்கூடத்தை சுத்தம் செய்தல், மற்றும் காய்கறிகளை வளர்ப்பதற்கான பகுதியை சுத்தம் செய்தல் போன்ற பணிகளில் பங்கேற்றனர்.

மதிய உணவிற்கு முன்னர், "சேவை" என்ற தலைப்பில் இடம்பெற்ற, மாஸ்டரின் உரைகளைப் பார்த்தனர். மதிய உணவிற்குப் பின்னர், அருகிலிருந்த ஏரியில் நிலவிய, ரம்மியமான சூழலில், சிறிது நேரம் செலவிட்டு, ஒருவரையொருவர் நன்கு தெரிந்து கொண்டனர். சில அப்யாசிகள், தங்களுக்கு பண்டாராவில் மற்றும் மாஸ்டருடன் ஏற்பட்ட அனுபவங்களைப் பகிர்ந்து கொண்டனர். இரவில் ஏற்றப்பட்ட சுடரொளி (campfire) ஒவ்வொருவரின் முகத்தையும் பிரகாசிக்கச் செய்தது. குழந்தைகள், பாடிக்களிப்புற்று, அங்கு குழுமியிருந்த அப்யாசிகளின் இதயங்களை சந்தோஷப்படுத்தினர். இரவு உணவிற்குப் பின்னர் ஒரு படம் திரையிடப்பட்டது.

அடுத்த நாள் காலை சத்சங்கத்தைத் தொடர்ந்து, மையப் பொறுப்பாளர் சகோதரர் பிரபாகர், இந்த நிகழ்ச்சியை உற்சாகமூட்டும் உரையுடன் முடித்து வைத்தார். இந்த நிகழ்ச்சி, வெவ்வேறு இடங்களைச் சேர்ந்த தன்னார்வத் தொண்டர்கள் சந்தித்துக் கொள்ளவும், தங்களுடைய கருத்துக்களை பகிர்ந்து கொள்ளவும், அதன்மூலம், நிறைய பிரச்சினைகளுக்கு, பல்வேறு அணுகுமுறைகளால் கிடைத்த ஒருமித்த தீர்வுகளைப் பெறவும், ஒரு உயரிய வாய்ப்பாக அமைந்தது.

## இளைஞர்களுக்கான நேரம்: காசியாபாத்

ஜூன் 26 மற்றும் 27 அன்று, காசியாபாத் மையம், இரண்டு நாள் கருத்தரங்கை ஏற்பாடு செய்திருந்தது. இந்த கருத்தரங்கின் தலைப்பு "இளமைப்பருவம் - முன்னேற மற்றும் முயற்சிக்கு உகந்த காலம்" ஆகும். சகோதரர் மகாவீர் சிங் ரோஹிலா அவர்களின் வரவேற்புரையைத் தொடர்ந்து "இளமைப் பருவம்" பற்றிய மாஸ்டரின் உரை இடம்பெற்றது. பின்னர், சகோதரி பிரீத்தி "முன்னுரிமை கற்றல்" என்ற ஒரு செயல்பாட்டினை நடத்தினார். இரவு உணவிற்குப் பின்னர், சகோதரி அனிதா, சுவாரசியமான விளையாட்டுகளை நடத்தினார். இரண்டாவது நாள் சத்சங்கத்தைத் தொடர்ந்து, எண்ணங்களின் ஆற்றல் பற்றிய "The Secret" என்ற ஒரு குறும்படம் காட்டப்பட்டது. பின்னர் சகோதரி அனிதா, "சமுதாயம் மற்றும் இயற்கை இவற்றின்மீது இளைஞர்களின் பொறுப்பு" பற்றி ஒரு உரை நிகழ்த்தினார். சகோதரர் ஜெயின், "மனதை ஒழுங்குபடுத்துதல்" பற்றிய ஒரு சிறிய நிகழ்ச்சியை நடத்தியதுடன், மாஸ்டரின் உரைகளிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட மேற்கோள்களையும் வழங்கினார். இந்த முயற்சி பங்கேற்பாளர்களால் பெரிதும் பாராட்டப்பட்டது.

## ஜம்முவிலிருந்து செய்தி - ஒரு புதிய மையம்

15 ஆகஸ்ட் அன்று, வனமகோத்சவத்தின் ஒரு பகுதியாக, ஜம்முவில் ஆசிரமத்திற்கு வாங்கப்பட்ட இடத்தின் ஒரு சிறிய பகுதியில், மரக்கன்றுகள் நடும் விழா நடைபெற்றது. ஜூலை 2010 அன்று, இடத்தைச் சுற்றிலும் மதில்சுவர் கட்டும் பணி முடிவுபெற்றது. 90-க்கும் அதிகமான பலதரப்பட்ட அர்ஜுனா, பாட்டில் பிரஷ், பைன், வேம்பு, ஆம்லா, அலெஸ்டோனியா, சிட்டாரா, சீனா ரோஸ், சீசேம்,



சில்வர் ஓக் போன்ற கன்றுகள், ஆசிரமம் கட்டுவதற்காக வாங்கப்பட்ட ஒரு ஏக்கர் நிலத்தில் நடப்பட்டன. கொதிக்கும் வெயில் இருந்த போதிலும், சுமார் 30 அப்யாசிகள் இதில் பங்கேற்றனர். உணவு அருந்தும் அறை, சமையலறை மற்றும் கழிப்பிடம் பற்றிய கட்டுமானப் பணித்திட்டங்கள், மாஸ்டரின் அனுமதி பெற வேண்டி அவரிடம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

ஸ்ரீ ராம் சந்த்ர மிஷன்®
எக்கோஸ் இந்தியா செய்திமடல்

## தாவண்கெரெ, கர்நாடகா: ஆசிரம கட்டுமானம்

தாவண்கெரெ மையம், விரல்விட்டு எண்ணக்கூடிய அளவில் அப்யாசிகளைக் கொண்டு துவங்கப்பட்டு, தற்சமயம் நூறு அப்யாசிகளைக் கொண்டதாக வளர்ச்சியடைந்துள்ளது. ஞாயிற்றுக்கிழமை சத்சங்கம், வழக்கமாக அப்யாசிகளின் இல்லங்களில் நடத்தப்பட்டு வந்தது, பின்னர், அப்யாசிகளின் எண்ணிக்கை அதிகமானதால், ஒரு பள்ளிக்கூடம் சத்சங்கம்



நடக்கும் இடமாக ஏற்பாடு செய்யப்பட்டது. மையம் தொடர்ந்து வளர்ந்தமையால், ஒரு ஆசிரமம் அமைக்க வேண்டியதன் தேவை உணரப்பட்டு, பின்னர், மிஷனுக்காக 2 ஏக்கர் நிலம் வாங்கப்பட்டதன் மூலம் நனவாக்கப்பட்டது. பிப்ரவரி 2009 அன்று, அடித்தளம் அமைக்கும் பணி துவங்கப்பட்டதுடன், ஏப்ரல் 25, 2010 அன்று சத்சங்கம் நடத்தப்பட்டு, தியானக்கூடம் மற்றும் சமையல் கட்டிடம் கட்டுவதற்கு அளவை அமைக்கப்பட்டது. நடைதளம் உட்பட தியான அரங்கத்தின் அளவு 45 *45 அடிகள். சமையலறை, பொருட்கிடங்கு மற்றும் அலுவலக கட்டிடம் உட்பட 60*15 அடிகளாகும்.

தியான அரங்க கட்டுமானப் பணி, சுவரின் அஸ்திவாரப் பீடம் வரையிலும், சமையற்கூடம், மேற்கூரை முடிக்கப்பட்ட நிலையிலும் உள்ளது. மேலும், கட்டுமானப்பணிகள், குடிநீர் மற்றும் தோட்டத்தின் தேவைகளுக்காக, ஒரு போர்வெல் கிணறு அமைக்கப்பட்டுள்ளது. 60 தேக்கு கன்றுகள், 10 வேப்பங்கன்றுகள், 10 ஹோன்ச் கன்றுகள் மற்றும் ஒரு சில தென்னைமரக் கன்றுகள் நடப்பட்டு, ஆசிரமத்தை பசுமையாக்கும் பணியும் தொடங்கப்பட்டுள்ளது. புதிய ஆசிரமக் கட்டிடம், இந்த அக்டோபர் மாதத்தில் தயாராகி விடும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.



# குழந்தைகளுக்கான நன்னெறிகள்

## ஹத்ராஸ், மத்திய பிரதேசம்

27 ஜூன் அன்று, ஹத்ராஸ் மையம், ஒரு VBSE கூட்டத்தை ஏற்பாடு செய்திருந்தது. இதில் 30 குழந்தைகள் மிகுந்த உற்சாகத்துடன் பங்கேற்றனர். இந்த நிகழ்ச்சி, 5 நிமிட பிராத்தனை தியானத்துடன் துவங்கியது. சகோதரர் அரவிந்த் சகஜ மார்க்கம் மற்றும் அதன் நோக்கம் பற்றிய ஒரு சிற்றுரை நிகழ்த்தினார். சகோதரர் ரிஷிராஜ்சிங், உடற்பயிற்சி, நடைமுறை வாழ்க்கையில் கடைபிடிக்க வேண்டிய உடல் நலம் மற்றும் சுகாதாரம் போன்றவற்றின் முக்கியத்துவம் பற்றி குழந்தைகளிடையே உரையாற்றினார். அதனை குழந்தைகள் கவனமாகக் கேட்டதுடன் குறிப்புக்களும் எடுத்துக்கொண்டனர். சகோதரர் அமீத், சகோதரர் ஹரேந்திரா மற்றும் பிற தன்னார்வ தொண்டர்கள் சேர்ந்து, பல்வேறு சிறு நாடகங்களை நடத்தினர். (Spelling Bee) வார்த்தை விளையாட்டு, அறிவுத் திறன் மற்றும் பொது அறிவு விளையாட்டுக்கள் நடத்தப்பட்டு, இந்த வகுப்புக்களில் கற்றுக் கொள்வதை, மகிழ்ச்சிகரமான ஒன்றாக மாற்றின. இந்த வெயில்கால கூட்டம், பங்கேற்பாளர்களுக்கு நினைவுப் பரிசுகள் வழங்கப்பட்டதுடன் நிறைவு பெற்றது.

## இந்தூர், மத்திய பிரதேசம்



சுமார் 40 குழந்தைகள் கலந்து கொண்ட 5 நாள் VBSE குழந்தைகள் முகாம்,ஜூன் 21 முதல் 25 வரை இந்தூர் மையத்தில் நடைபெற்றது. இது, தொடர்ந்து பன்னிரெண்டாவது ஆண்டாக, குழந்தைகளுக்கு நன்னெறி கற்பிப்பதற்காக, இம்மையம் நடத்தும் ஒரு நிகழ்ச்சியாகும். VBSE வகுப்புக்கள் களிமண் ஓவியம், கண்ணாடி வண்ணம் தீட்டுதல் மற்றும் தீயின்றி சமைத்தல் போன்ற பகுதிகளுடன் நடத்தப்பட்டன.

மிஷன் பிரார்த்தனையுடன் தொடங்கி, அதனைத் தொடர்ந்து ஐந்து நிமிட மௌனம், அதன் பின்னர் யோகா ஆகியவை இருந்தன. அடுத்த பத்து நிமிடங்களுக்கு நன்னெறியை உள்ளடக்கிய ஒரு படம் காண்பிக்கப்பட்டது. பின்னர், குழந்தைகள் அவர்களுக்கான குழுவுடன் சேர்ந்து கொண்டு, சுமார் இரண்டு மணி நேரம் தங்களுக்கு கொடுக்கப்பட்ட செயல்களைச் செய்தனர். அவர்கள், பகிர்ந்து கொள்ளல், பாராட்டுதல், ஊக்கப்படுத்துதல் மற்றும் ஒத்துழைத்தல் போன்ற நன்னெறிகளை, பல்வேறு செயல்பாடுகளின் மூலம் கற்றுக்கொண்டனர்.

## பிலிபீட், உத்திர பிரதேசம்

பிலிபீட் மையம், ஜூன் 11 முதல் 20 வரை, 10 வயது முதல் 14 வயதிற்குட்பட்ட குழந்தைகளுக்கு, VBSE கோடை வகுப்புகளை நடத்தியது. அதில், நாற்பது குழந்தைகள் மிகுந்த ஆர்வத்துடன் கலந்து கொண்டனர். அந்த வகுப்புகள், காலை 6.30 மணிக்கு தொடங்கியது. மேலும், அதன் செயல்பாடுகள் பல பகுதிகளாக பிரிக்கப்பட்டிருந்தன. முதல் பகுதியாக, உடற்பயிற்சி, பிரார்த்தனை, தியானம் மற்றும் VBSE பாடப்பகுதியிலிருந்து ஒரு பாடம் என நடத்தப்பட்டது. இத்துடன் செய்தித்தாள், போக்குவரத்து விதிமுறைகள், தபால் துறை, நேர நிர்வாகம், கணினி, உடல் நலம் ஆகிய துறைகளிலிருந்து வந்திருந்த சிறப்பு விருந்தினர்கள் உரையாற்றியதுடன், ஒளி-ஒலி உதவியுடன் தொகுத்தும் வழங்கினர். ஓரிகாமி, கைத்திறன் வேலைப்பாடுகள், ஓவியம், பாடுதல், கட்டுரை எழுதுதல் மற்றும் சிறு நாடகங்கள் போன்றவை நடத்தப்பட்டன. இந்த வகுப்புக்களின் கடைசி நாளன்று, பங்கேற்ற குழந்தைகளின் பெற்றோர்கள், அவர்தம் குழந்தைகளின் பாடல் மற்றும் நடன நிகழ்ச்சிகளை காண அழைக்கப்பட்டிருந்தனர்.

ஸ்ரீ ராம் சந்த்ர மிஷன்®
எக்கோஸ் இந்தியா செய்திமடல்

# ஒளிமையங்கள்

"வாழ்க்கை என்பது, ஒரு நிரந்தரக் கல்வித்திட்டம் போன்றது....இவ்வாழ்க்கையில் அது முடிவடைவதில்லை. அது அனாதியானந்தம். கற்றல் என்பது எப்பொழுது தொடங்குகிறது என்பது நமக்குத் தெரியாது, இது ஒரு போதும் முடிவதில்லை. ஏனெனில், பரிணாம வளர்ச்சியில் முன்னேறி, ஒரு நிலை மாறி அடுத்த நிலைக்கு உயரும்போது, நாம் தொடர்ந்து பணியாற்றுகிறோம்".



## நாட்றம்பள்ளி, தமிழ்நாடு

ஸ்ரீ ஓம்பிரகாஷ் அவர்கள், அக்டோபர் 2004 ஆம் ஆண்டு, நாட்றம்பள்ளியிலுள்ள ஆசிரமத்தை மிஷனுக்கு நன்கொடையாக வழங்கினார். பின்னாளில் அவர் அப்யாசியாகி, பிரசப்டராகவும் செயல்படுகிறார். மாஸ்டர் சென்னையிலிருந்து பெங்களூருக்கு, அடிக்கடி சாலை வழியாக பயணிக்கும் போது, ஓய்விற்காக தங்கிச்செல்லும் இடமாக, நாட்றம்பள்ளி ஆசிரமம் உள்ளது. ஆசிரமம், ஏலகிரி மலையிலிருந்து 20 கி.மீ தொலைவிலுள்ள, மலைகளால் சூழப்பட்ட கிராமத்தின் நடுவே, மிக ரம்மியமான சூழலில் அமைந்துள்ளது.

முதன் முதலாக, ஆசிரமத்தின் ஒரு ஏக்கர் நிலமானது நீளமாகவும், குறுகலாகவும் இருந்தது. அதில் நீளவாக்கில் கட்டப்பட்ட, ஆசிரமத்தின் கட்டிடமானது, தொலைவிலிருந்து பார்ப்பதற்கு போர்கப்பல் போன்று காட்சியளிக்கிறது. கட்டிடங்களுடன், உடனடியாக பயன்படுத்தும் நிலையில், நன்கொடையாக கொடுக்கப்பட்ட சில ஆசிரமங்களுள் இதுவும் ஒன்று. தாராளமாக நன்கொடை அளிப்பவர்கள் கொடுக்கும் நிதி வரும் போதெல்லாம் விரிவாக்கப்பட்டு, பல அடுக்குகளைக் கொண்டதாக உள்ளது. இந்த அளவிலான ஆசிரமம், அதிக கட்டுமானப் பரப்பளவு கொண்டருப்பது, குறிப்பிடத்தக்கது . ஆசிரமம் நன்கொடையாக வழங்கப்பட்டபொழுதே, 2000 அப்யாசிகள் அமரும் அளவில் தியானக்கூடமும், ஏறத்தாழ 500 பேர் தங்க விடுதியும், போதிய வசதிகளுடன் கூடிய சமையலறையும், உண்ணுமிடமும் கொண்டதாக இருந்தது. இரு சிறு கட்டிடங்கள், மாஸ்டரின் குடிலாகவும் நூலகமாகவும் மாற்றப்பட்டுள்ளன.

SRCM யின் பல மையங்கள் மற்றும் துணை மையங்களின் நடுவில் அமைந்துள்ளதால், ஆன்மீக கூட்டங்கள் நடைபெறுவதற்குச் சந்திக்கும் இடமாகவும் உள்ளது. ஞாயிற்றுக்கிழமை இங்கு நடத்தப்படும் சத்சங்கத்தில், அருகிலுள்ள மையங்களான திருப்பத்தூர், வாணியம்பாடி, வெல்லுக்கோட்டை மற்றும் பாகூரிருந்து அப்யாசிகள் கலந்து கொள்கின்றனர். இதைத்தவிர, மாதந்தோறும் நடைபெறும் முழு நாள் நிகழ்ச்சிகளில் ஒசூர், கிருஷ்ணகிரி, பர்கூர், காவேரிபட்டினம், குப்பம், பணந்தூர், ஜகதேவி, V.கோட்டை, ஆரணி மற்றும் வேலூர் ஆகிய இடங்களிலிருந்து சுமார் 200 அப்யாசிகள் கலந்து கொள்கின்றனர்.

மேலும், ஆகஸ்ட் 2005 ஆம் ஆண்டு நடைபெற்ற, பிரசெப்டர்களின் கருத்தரங்கம் (கேரள மண்டலம்) மற்றும், டிசம்பர் 2006 -ல், மூன்று வாரங்களாக நடைபெற்ற இன்டர்நேஷனல் ஸ்காலர்ஷிப் பயிற்சி ஆகிய நிகழ்ச்சிகள் நடத்த மாஸ்டரின் தேர்வாக இந்த ஆசிரமமிருந்தது.

கடந்த இரண்டு ஆண்டுகளாக, ஆசிரத்தின் இரு பக்கங்களிலும், கூடுதல் நிலங்களாக 1.75 ஏக்கர்கள் மற்றும் 0.94 ஏக்கர்கள் வாங்கப்பட்டுள்ளன. அதிக நிலப்பரப்புள்ள பகுதியில் காய்கறிகள், பழ வகைகள் மற்றும் பூக்கள் பயிரிடப்பட்டுள்ளன. இது, அப்யாசிகள் சேவை செய்யவும், மற்றும் அவர்களை இணைப்பதற்கும் ஏற்ற தளமாகவும் இருக்கிறது. இங்குள்ள பெரிய பப்பாளித் தோட்டம் வருமானம் வரும் வகையில் செயல்படுகிறது. இது மாஸ்டரின் பாராட்டை பெற்றது. அவர், இங்கு விளையும் பப்பாளிதான் நாட்டில் சிறந்த சுவையுடையது என்று கூறினார்.

நாட்றம்பள்ளி ஆசிரமம், ஏங்கும் இதயங்களுக்கு ஆன்மீக பூந்தோட்டமாக இருப்பதுடன், இனிவரும் வருடங்களில் அவர்களை அன்போடு ஆதரித்து, பேணி வளர்க்கும் இடமாகவும் செயல்படும்.







To download or subscribe to this newsletter, please visit http://www.sahajmarg.org/newsletter/india For feedback, suggestions and news articles please send email to in.newsletter@srcm.org

© 2009 Shri Ram Chandra Mission ("SRCM"). All rights reserved. “Shri Ram Chandra Mission", "Sahaj Marg", "SRCM", “Constant Remembrance” and the Mission's Emblem are registered Trademarks of Shri Ram Chandra Mission.This Newsletter is intended exclusively for the members of SRCM. The views expressed in the various articles are provided by various volunteers and are not necessarily those of SRCM.